தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-9-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**விவசாயிகள் சேமித்து வைத்த மஞ்சளை அக்டோபர் மற்றும் நவம்பரில் விற்பனை செய்யலாம்**

ஏப்ரல் 2012 இல் மஞ்சள் விலை மிகவும் குறைந்து குவிண்டால் ரூ.3500க்கு விற்றது. அதன் பின்னர் மஞ்சள் விலை ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. இருப்பு மஞ்சள், தற்போதைய மஞ்சள் சாகுபடி நிலவரம், ஏற்றுமதித் தேவை மற்றும் உள்நாட்டுத் தேவை ஆகிய காரணிகள் இந்தியாவில் மஞ்சள் விலையை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தற்போது முன்பேர வர்த்தகமும் மஞ்சள் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்தியாவின் மொத்த மஞ்சள் உற்பத்தியில் ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் 70 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன. தற்போது மஞ்சள் விவசாயிகள் குவிண்டாலுக்கு ரூ.5700 வரை பெறுகின்றனர். பெரும்பாலான ஆந்திர விவசாயிகள் நடப்பு விலைக்கு மஞ்சளை விற்பனை செய்து விட்டனர். ஆனால் தமிழக விவசாயிகள் நல்ல விலையை எதிர்பார்த்து மஞ்சளை சேமித்து வைத்துள்ளனர்.

இந்தியாவில் 45 இலட்சம் மஞ்சள் மூட்டைகள் (1 மூட்டை -75 கிலோ) இருப்பில் உள்ளதாகவும், இதில் தமிழகத்தில் மட்டும் 30 இலட்சம் மூட்டைகளும் பிற மாநிலங்களில் மீதியும் இருப்பு உள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மஞ்சளின் தேவை ஆண்டிற்கு 65-75 இலட்சம் மூட்டைகளாகும். இது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதித் தேவையை உள்ளடக்கியதாகும். வர்த்தகர்களின் கணக்கீட்டின் படி 2013-14 ஆம் ஆண்டில் ஆந்திராவில் மஞ்சள் பயிரிடும் பரப்பு 46,000 எக்டேர் என்றும் இது கடந்த ஆண்டை விட 6 சதவீதம் குறைவென்றும் தெரிவிக்கின்றன. மேலும் தமிழகத்தில் 2013-14 ஆம் ஆண்டில் மஞ்சள் பயிரிடும் பரப்பு 18550 எக்டேர் என்றும் இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 40 சதவீதம் குறைவாகும் என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இச் சூழலில் மஞ்சள்

விவசாயிகள் சரியான விற்பனை முடிவுகளை எடுக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 25 ஆண்டுகள் நிலவிய மஞ்சள் விலையை ஆய்வு செய்தது, அக்டோபர் மற்றும் நவம்பர் 2013 இல் மஞ்சள் விலை குவிண்டால் ரூ.6500 ஐத் தாண்டும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

வட இந்தியாவில் அதிகரித்துள்ள மஞ்சள் தேவை, உயர்ந்து வரும் ஏற்றுமதித் தேவை, ஆந்திராவிலிருந்து எதிர்பார்க்கப்படும் குறைந்து வரத்து மற்றும் தற்போதைய பருவத்தில் தமிழகத்தில் குறைந்துள்ள மஞ்சள் சாகுபடிப் பரப்பு ஆகிய காரணங்களினால் எதிர்வரும் மாதங்களில் மஞ்சள் விலை அதிகரிக்கும். ஆகவே விவசாயிகள் மஞ்சளை சேமித்து வைத்து அக்டோபர் -நவம்பர், 2013 இல் விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2431405

மக்கள் தொடர்பு அலுவலர்